**தேசிய இளைஞர் சேவை சபை - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இளைஞர் சேவை சபையின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, கம்பெனியின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. கணக்காய்வின் விடயவெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கம்பெனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து சபையின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக

திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

**1.5.2 இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| உரிய நியமத்தின் தொடருடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 01 இல் 99 பந்தி பிரகாரம் காலப் பகுதிக்குள் அடையாளம் காணப்பட்ட எல்லா வருமானம் மற்றும் செலவின உருப்படிகள் இலாபம் அல்லது நட்டங்களில் உள்ளடக்குதல் வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவை தனியார் கமபெனியிடம் செலுத்தப்பட வேண்டிய மொத்தம் ரூபா. 15,479,900 ஐ கணக்கு வைக்கப்படவில்லை என்பதுடன், முன்னரான ஆண்டுக்கு ஏற்புடையதாக செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா. 61,793,120 ஐ மீளாய்விற்கான ஆண்டில் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 45,982,593 ஆக காணப்பட வேண்டிய இலாபம் ரூபா. 330,627 ஆன பற்றாக்குறையாக இருந்தது. | 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் போதுமற்றதாகியதால் குறித்த செலவினம் அட்டுறு செலவினமாக கணக்கு வைக்க முடியவில்லை. எதிர் வருங் காலத்தில் இந்த செலவினம் அட்டுறு செலவினமாக கணக்கு வைக்கப்படும். | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமைவாக நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் 65 ஆவது பந்தி பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக, நடப்பாண்டின் இறுதியில் முற்று முழுதாக தேய்மானம் மேற்கொண்ட செலவினம் ரூபா. 941,356,738 ஆன 03 சொத்து வகைகள் மேலும் பயன்பாட்டில் இருந்தன. அதன்படி, ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட குறைப்பாடு இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 03 பிரகாரம் மீள் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் படி சொத்துக்களை மீள்கணிப்பீடு செய்தல் தொடர்பான பணிகளை எதிர் காலத்தில் மேற்கொண்டு மொத்த தேக்கநிலை பெறுமதியினை கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமைவாக நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 09 இல் 15 பந்தி பிரகாரம் செலவினம் அல்லது தேறிய காசாக்கப்பட்ட பெறுமதி ஆகிய பெறுமதிகளில் குறைந்த பெறுமதிக்கு இருப்புகளை மதிப்பிடல் வேண்டுமாயினும், சபையால் செலவினத்திற்கு பெறுமதி மேற்கொள்கின்ற வகையில் இருப்புகளின் கொள்கை அடையாளம் காணப்பட்டிருந்தது. | ஆண்டு இறுதியில் இருப்புகளை கணக்கிடல், செலவினம் அல்லது தேறிய காசாக்கப்பட்ட பெறுமதி என்பவற்றில் குறைந்த பெறுமதிக்கு கணக்கிடல் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமைவாக இருப்புகளின் கொள்கை அடையாளம் காணப்படுதல் வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) தேசிய இளைஞர் சேவை சபையின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் மொத்தம் ரூபா. 761,782,870 ஆன முன்னெடுக்கும் வேலைகளின் பெறுமதி நிதி நிலைமை கூற்றில் சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்படுதல் வேண்டுமாயினும், நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டில் வேலைகளை முடிவுறுத்திய மொத்தம் ரூபா. 247,717,101 ஆன கட்டிடங்களின் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தது. | நடைமுறை சொத்துகளாக காட்டப்பட்டுள்ள முன்னெடுக்கும் வேலை கணக்கில் மீதி மற்றும் இறுதி பற்றுச்சீட்டில் செலுத்தப்படாத ரூபா. 247,711,101 ஆன கட்டிடங்களின் பெறுமதி 2020 ஆண்டில் செவ்வையாக்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சொத்துக்களை செவ்வையாக வகைப்படுத்தி நிதிக் கூற்றுகளில் காட்டப்படுதல் வேண்டும். |
| (ஆ) சபைக்கு சட்டரீதியான உரித்து இருந்த 05 காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படவில்லை. | மாத்தறை தென் மாகாண அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகம் அமைந்துள்ள காணி மதிப்பிடப்பட்டு கிடைக்கப்பெற்றுள்ளது. அந்தப் பெறுமதி 2020 ஆண்டில் நிதிக் கூற்றில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய காணிகளையும் மதிப்பிடுவதற்கு துரிதமாக பணியாற்றும் படி சம்பந்தப்பட்ட | சபைக்கு சட்ட ரீதியான உரித்து உள்ள சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அலுவலர்களுக்கு என்னால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (இ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 14 இல் தொடர்புடைய தரப்புகளை வெளிப்படுத்தலில் 40 ஆவது பந்தி பிரகாரம், பிரதான முகாமைத்துவ குழுவினரின் திரண்ட ஊழியம் வெளிப்படுத்த வேண்டுமாயினும், வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவை தனியார் கம்பெனியின் தலைவர் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை தேசிய இளைஞர் சேவை கூட்டுறவு அமைப்பின் தலைவராக பணியாற்றுதல் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில், வருடாந்த கொடுப்பனவாக ஒழுங்குமுறையில் மொத்தம் ரூபா. 200,000 ம் மற்றும் ரூபா. 75,000 ம் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | 2020 ஆண்டில் நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் போது கணக்கீட்டு நியம இலக்கம் 14 இன் படி சம்பந்தப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் படி நிதிக் கூற்றுகளில் தேவையான தகவல்களை வெளிப்படுத்தல் வேண்டும். |
| (ஈ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 14 இல் தொடர்புடைய தரப்புகளை வெளிப்படுத்தலில் 40 ஆவது பந்தி பிரகாரம், பிரதான முகாமைத்துவ குழுவினரின் திரண்ட ஊழியம் வெளிப்படுத்த வேண்டுமாயினும், வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவை தனியார் கம்பெனியின் தலைவர் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை தேசிய இளைஞர் சேவை கூட்டுறவு அமைப்பின் தலைவராக பணியாற்றுதல் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில், வருடாந்த கொடுப்பனவாக ஒழுங்குமுறையில் மொத்தம் ரூபா. 200,000 ம் மற்றும் ரூபா. 75,000 ம் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | 2020 ஆண்டில் நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் போது கணக்கீட்டு நியம இலக்கம் 14 இன் படி சம்பந்தப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் படி நிதிக் கூற்றுகளில் தேவையான தகவல்களை வெளிப்படுத்தல் வேண்டும். |

### 1.5.5 இணங்கப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுகளின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கை படி பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் செவை தனியார் கம்பெனியிடம் செலுத்தப்பட வேண்டிய கடன் கொடுநர்களின் மீதி | ரூபா 110,000 | ரூபா 49,229,360 | ரூபா 49,119,360 | கடன் கொடுநர்களாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா. 110,000 ஆன மீதி தவறுதலாக 2015 ஆம் ஆண்டில் அதிகமாக கணக்கு வைக்கப்பட்ட கணக்கீட்டு குறைப்பாடு ஆவதால் அதனை 2020 ஆம் ஆண்டில் முன்னரான ஆண்டுக்கான சீராக்கலாக தற்போது செவ்வையாக்கப்பட்டுள்ளது. | வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் தனியார் கம்பெனியிடம் செலுத்தப்பட வேண்டிய கடன் மீதி சம்ப்நதப்பட்ட கம்பெனியின் தகவல்களுன், பரிசோதனை செய்து செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.5.6 கூட்டிணைப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய இளைஞர் சேவை சபை 98% ஆன பங்குரிமையுடன் 1981 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவை தனியார் கம்பெனி ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், சபையால் திரட்டிய நிதிக் கூற்றுகளை மீளாய்விற்கான ஆண்டு வரை கணக்காய்வில் சமர்ப்பிக்கப்படவில்லை. அதேபோன்று கம்பெனியால் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படாமை தொடர்பில் சபை கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவை தனியார் கம்பெனி தற்போது 2017.12.31 ஆந் திகதி வரை கணக்குகளை தயாரித்துள்ளது. எதிர்வருங் காலத்தில் இளைஞர் சேவை கம்பெனியின் கணக்குகளை இற்றைப்படுத்தும் வகையில் தேவையான கணக்குகளை தயாரிக்கும் படி தற்போது முகாமைத்துவத்திடம் அறிவிக்கப்பட்டுள்ளது. | இணைந்த நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் தேவை தொடர்பாக தொடர்ச்சியாக முகாமைத்துவத்தை அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு இணைந்த நிதிக் கூற்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்.

### 1.6.1 கிடைக்கப்பெறுவனவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பல்வேறு கடன்கொடுநர்களின் கீழ் 02 ஆண்டுகளுக்கும் அதிகமான பழைமையான மொத்தம் ரூபா. 1,986,304 ஆன கடன் மீதியை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | இளைஞர் அமைப்பு சம்மேளனத்தின் ரூபா. 269,972 ஆன தொகை தற்போது செலுத்தப்பட்டுள்ளதுடன், எஞ்சிய மீதிகளை எதிர் காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தொடர்ச்சியாக இருந்து வரும் கடன் மீதியை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.8 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் ஒழுங்கமையாமை.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கான தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையில் அத்தியாயம் II இல் 5.2.1 பிரிவு | பதவிநிலை தரத்தின் பதவிகளில் வெற்றிடங்களை தாமதமின்றி நிரப்புவதற்கு திணைக்களத்தின் தலைவர், நியமன அதிகாரியிடம் அறிவிக்காது 2011 ஆண்டு தொடக்கம் சபையின் வெற்றிடங்களாக நிலவிய 28 உதவி பணிப்பளார் பதவிகளின் பொருட்டு 21 மாவட்ட இளைஞர் சேவை அலுவலர்களையும் நிதி அலுவலர்களையும் அப் பதவிகளில் கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் நியமனம் செய்யப்பட்டிருந்தது. | வெற்றிடங்களின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அமைச்சு செயலாளரின் அனுமதி பெற்றுக்கொள்வதற்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப்-பெற்றவுடன் உரிய வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்து சுற்றுநிருபத்தின் ஆலோசனை பிரகாரம் வெற்றிடங்கள் நிலவுகின்ற பதவிகளுக்கு பொருத்தமான அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி /12 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| 8.2.2 பந்தி | திறைசேரி அனுமதியின்றி தேசிய இளைஞர் சேவைகள் சபைக்குரிய தேசிய இளைஞர் நிலைய விளையாட்டு கழகங்களால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது ரூபா. 10,157,722 அன பணத் தொகை நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | தேசிய இளைஞர் சேவை சபை வளாகத்தில் பேணிச் செல்கின்ற விளையாட்டு கழகத்தில் நிருவாக மற்றும் நிதிசார் நடவடிக்கைகளை முறையாக பேணிச் செல்லாமையால் விளையாட்டு கழகத்தின் நடவடிக்கைகளை மீள் கட்டமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | நிதியங்களை முதலீடு செய்கையில் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |
| (இ)இலங்கை சனநாயக சோசாலிசக் குடியரசின பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.4 (ஈ) | 2019 யொவுன்புர நிகழ்ச்சியின் காட்சி கூடங்கள் மற்றும் பிரதான மேடையின் பெறுகை நடவடிக்கைகளின் பொருட்டு நியமனம் செய்த தொழில்நுட்ப குழு, பெறுகை வழிகாட்டல்களுக்கு முரணாக சபையில் பணியாற்றும் அலுவலர்களை மட்டும் கொண்டமைந்திருந்தது. | தற்போது தேசிய நிகழ்ச்சிகள் மற்றும் உயர் பெறுமதிகளைக் கொண்டுள்ள கொள்வனவுகளின் பொருட்டு தொழில்நுட்ப குழுக்களை நியமனம் செய்கையில் பெறுகை வழிகாட்டல் கோவையில் வழிகாட்டல்களை பின்பற்றுவதற்கு ஆலேசானை வழங்குவதற்கு குறித்துக்கொண்டேன். | பெறுகை வழிகாட்டல்களின் படி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களை நியமனம் செய்தல் வேண்டும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**நிதிசார் விளபையன்**

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 330,627,000 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 109,356,000 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 221,271,000 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. ஆண்டின் வருமானம் ரூபா. 29,268,000 ஆல் அதிகரித்திருப்பினும், ஆண்டின் தொழில்பாட்டு செலவினம் ரூபா. 240,588,000 ஆல் அதிகரித்திருத்தல் இந்த வீழ்ச்சியடைதலுக்கு காரணமாகியிருந்தது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை வாழ் இளைஞு-ர்களின் காலத்திற்கேற்றவா-றான தேவைப்பாடுகள் மற்றும் தேவைகளை சந்தர்ப்பத்திற்-கேற்றவாறு முகாமைத்துவம் செய்தல் உள்ளிட்ட பிரதான 05 நோக்கங்களின் கீழ் இளைஞர் சேவை சபையால் 2019 மார்ச் 26 ஆந் திகதி தெபரவெவ பொது விளையாட்டு மைதான-த்தில் ''யொவுன்புர நிகழ்ச்சி-யினை'' நடாத்துவதற்கு திட்ட-மிடப்பட்டிருந்தது. ஆயினும், அதற்கு முரணாக கண்காட்சி மற்றும் பொழுதுபோக்கு அம்ச-ங்களுக்கு முதன்மை வழங்கப்-பட்டு 03 தோரணங்களை நிரு-மாணித்தல், 05 நாள் முழுவதும் இரவு நேர இசை நிகழ்ச்சிகளை நடாத்தல், தற்காலிக சினிமா சாலைகளை நிருமாணித்தல், ஆகிய ''யொவுன்பர நிகழ்ச்-சியின்'' நோக்கங்களுடன் நேரடி தொடர்பு இல்லாத பணிகளின் பொருட்டு மீளாய்வு ஆண்டில் மொத்தம் ரூபா. 40,593,305 ஐ செலவிடப்பட்டிருந்தது. | இந்த செலவினங்களை மேற்-கொள்வதற்கு காரணம் யாதெ-னில், 110 ஏக்கர் அளவிலான நிலப் பகுதியில் நிகழ்ச்சி நடாத்தல், சர்வதேச நிகழ்ச்சி-களில் நினைவுச் சின்னங்கள் வழங்குதல், இளைஞர்களின் உத்-யோகத்தை மேம்படுத்தல், பிரதம அமைச்சர் அவர்களின் பங்களிப்பு மற்றும் அதிகளவிலான பொது மக்களின் பிரதிநிதிகள், உயர் மட்டத்திலான அரச அலுவலர்கள் ஆகியோர் பங்குபற்றுதல் மற்றும் வெளிநாட்டு இளைஞர்கள் பங்கு-பற்றுதல் ஆகிய காரணங்க-ளினால் அவர்களுக்கு தேவை-யான வசதிகளை அளித்தமை-யாகும். | சபையால் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துகையில் சிக்கனமாகவும் பயனுள்ள-தாகவும் மேற்கொள்-வதற்கு கவனம் செலுத்த-ப்பட்டு செலவினங்களை செய்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ)2019 ஆண்டில் நடாத்தப்பட்ட ''யொவுன்புர நிகழ்ச்சி'' பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு செய்த செலவினம் ரூபா. மில்லியன் 200 ஆயினும், அதனை விஞ்சி ரூபா. 53,992,874 செலவிடப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சிக்கு தேவையான 02 களஞ்சிய டோம்ஸ்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வத-ற்காக கொள்முதல் செயற்பாட்டுக்கு புறம்பாக பெற்றுக்கொள்வதற்கு | கணக்காய்வு ஐயப்பாடு-களுக்கு உட்படுத்தியுள்ள விடயங்கள் தொடர்பாக முறையாக விசாரணை நடாத்தப்பட்டு தேவையான நடவடிக்கை மேற்கொள்-வதாக அறிவிக்கப்ப-ட்டுள்ளது. | இந்த நடவடிக்கையின் போது சபைக்கு ஏதேனும் நட்டம் ஏற்பட்டுள்ளதா? என்பது தொடர்பாகவும் அவ்வாறு நட்டம் ஏற்ப-ட்டிருப்பின் குறித்த நட்டங்களை அறவிடு-வதற்கு தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அந்த டோம்ஸ்களை கொள்வனவு செய்வதற்கு கட்டளை வழங்கிய திகதியை விஞ்சி 08 நாட்கள் தொடக்கம் 10 நாட்கள் வரை பயன்படுத்தியதாக குறிப்பிடப்பட்டு மொத்தம் ரூபா. 2,227,400 ஐ மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) சபையின் உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்படுத்துகின்ற 90 அலுவலர்களிடமிருந்து தாபன விதிக் கோவையில் XIX அத்தியாயத்தில் 5.4, 5.4.1, 5.5, 5.7 5.8 உபபிரிவு மற்றும் 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கை பிரகாரம் சம்பந்தப்பட்ட அலுவலரது சம்பளத்திலிருந்து வீட்டு வாடகை, நீர் மற்றும் மின்சாரம் பயன்படுத்தல் பொருட்டு கட்டணங்கள் அறவிடல் மேற்கொண்டிருக்கவில்லை. கணக்காய்விடம் வழங்கிய தகவல்கள் மீது மேற்கொண்ட கணக்கிடல் பிரகாரம், மீளாய்விற்கான ஆண்டில் மட்டும் 46 அலுவலர்களிடமிருந்து ரூபா. 1,878,238 அளவிலான வீட்டு வாடகை அறவிட வேண்டியிருந்தது. | பணம் அறவிடல் தொடர்பான முன்னேற்றத்தில் திருப்திகரமான நிலைமை இல்லாத படியால், அது தொடர்பான பல்வேறு பிரச்சினைகள், கேள்விகள் அலுவலர்களால் முன்வைக்கப்படுவதுடன், தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் படி குறித்த உத்தியோகபூர்வ இல்லங்களில் நிலவுகின்ற வசதிகள் மற்றும் நிலைமைகள் தொடர்பாக தெளிவுபடுத்தல்களும் மேற்கொள்ளுதல் வேண்டுமென நம்புவதுடன், அதனையும் குறித்த குழுவிடம் முன்வைக்கப்பட்டு நியாயமான தீர்மானம் மேற்கொள்ளுதல் வேண்டுமென அவதானிக்கப்படுகிறது. | சபைக்குரிய உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கும் அலுவலர்களிடமிருந்து தாபன விதிக் கோவையின் படி அறவிட வேண்டிய பணத் தொகையினை அறவிடுதல் மற்றும் அதற்கு ஏற்புடையதான ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பணியாற்றுதல் வேண்டும். |
| (இ) தேசிய இளைஞர் சேவை சபையின் தலைவரின் தலைமைத்துவத்தில் மற்றும் சபையின் நிரந்தர சம்பளம் பெறுகின்ற அலுவலரை பூரண காலத்திற்கு சேவையில் ஈடுபடுத்தி சபையினுள் விளையாட்டு கழகமொன்றை பேணிச் செல்வதுடன், அதன் பயிற்றுவிப்பு நடவடிக்கைகளுக்கு எந்தவொரு கட்டணமும் செலுத்தாது சபையின் வளங்களை பயன்படுத்தப்பட்டிருந்தது.<br><br>விளையாட்டு கழகத்தின் நடவடிக்கைகள் பொருட்டு ஆலோசகர்கள் மற்றும் சபையின் அலுவலர் ஒருவருக்கு மீளாய்விற்கான ஆண்டில் மொத்தம் ரூபா.2,621,130 ஐ சபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. ஆயினும் மீளாய்விற்கான ஆண்டு இறுதியாகும்போது ஆண்டுக்கு ஏற்புடையதான உறுப்பினர் கட்டணமாக ரூபா. 5,518,150 | தேசிய இளஞைர் சேவை சபை வளாகத்தில் பேணிச் செல்கின்ற விளையாட்டு கழகத்தின் நிருவாக மற்றும் நிதிசார் நடவடிக்கைகள் முறையாக பேணப்படாமையால் விளையாட்டு கழகத்தின் நடவடிக்கைகளை மிள் கட்டமைப்பதற்கு பணியாற்றப்படுகிறது. | விளையாட்டு கழகத்தின் நிருவாக நடவடிக்கைகளை முறைசார் படுத்துவதற்கு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஐ விளையாட்டு கழகம் அவிடப்பட்டிருந்ததுடன், மொத்தம் ரூபா. 10,157,722 ஆன நிலையான வைப்புகள் மற்றும் ரூபா. 7,104,863 ஆன வைப்புகள் இருந்த போதிலும், அதன் நிதிசார் நடவடிக்கைகள் சபையின் நிருவாகமின்றி பேணிச் செல்வதாக அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) தேசிய இளஞைர் சேவை சபையின் விபரமான செயற்றிட்டம் படி கற்கைநெறி கட்டணங்கள் தொடர்பில் கொள்கையொன்றை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக கொண்டிருப்பினும், 2019 ஆம் ஆண்டு இறுதியில் கற்கைநெறி கட்டணங்கள் தொடர்பில் உரிய கொள்கை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை என்பதுடன், சபையின் கீழ் பயிற்சி நிலையங்களில் நடைமுறைப்படுத்துகின்ற ஒரே கற்கைநெறி பொருட்டு பல்வேறு வகையில் கட்டணங்களை அறவிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. | தேசிய இளஞைர் சேவை சபை மூலம் நடைமுறைப்படுகின்ற பூரணகால கற்கைநெறிகள், பகுதி நேர கற்கை நெறிகள், குறுகியகால கற்கை நெறிகள் 2020 இரண்டாவது கற்கை தவணையிலிருந்து சுயாதீனப்படுத்தி உரிய கற்கைநெறி கட்டணங்களின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு தற்போது வரையுள்படுத்தியுள்ளதுடன், 2020 இரண்டாவது கற்கை தவணையிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | கற்கைநெறி கட்டணம் அறவிடுவதற்கு முறையான முறைமை நடைமுறைப்படுதல் வேண்டும். |
| (இ) தேசிய இளைஞர் சேவை சபையின் விபரமான செயற்றிட்டம் படி 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆண்டு வரையிலான காலப் பகுதியில் குறைந்த சலுகைகளுடன் கூடிய 100 மாணவர்கள் பொருட்டு ஓராண்டுக்கு ரூபா.மில்லியன் 4.8 படி வழங்குவதற்கு ரூபா.மில்லியன் 33.6 ஒதுக்கீடு செய்திருப்பினும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் குறித்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. | திறன் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சி மூலம், செயற்றிட்டம் படி நிதி உதவி தேவைப்படும் பயிலுநர்களின் பொருட்டு நிதிசார் உதவி வழங்குவதற்காக 2014 – 2020 செயற்றிட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், இதுவரை தேசிய இளைஞர் சேவை சபையிடம் திறன் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சி மூலம் ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. | குறைந்த சலுகைகளுன் கூடிய இளைஞர் யுவதிகளை தொழில்சார் பயிற்சி துறையில் ஈடுபடுத்திக் கொள்வதற்கு நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தல் வேண்டும். |
| (ஈ) திறன் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சியின் கீழ் சபையால் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டம் படி 1700 மேலதிக பயிற்சி பயிலுநர்களை உருவாக்குவதற்காக 10 பயிற்சி நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்கு ரூபா.மில்லியன் 611 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 428 ரூபா.மில்லியன் செலவிடப்பட்டு | விபரமான செயற்றிட்டம் படி, தேசிய இளஞைர் சேவை சபையால் திறன் துறை சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி ஒதுக்கீடுகளை கொண்டு 10 பயிற்சி நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு | நிருமாணிப்பு ஒப்பந்தம் தொடர்பில் தற்போதுள்ள பலவீனமான நிருவாக நிலைமையை செவ்வைப்படுத்துவதற்கு உரிய மேற்பார்வையுடன் அந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 06 நிலையங்களை நவீனமயப்படுத்தியிருப்பினும், அதில் மூன்று பயிற்சி நிலையங்களில் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் ஒப்பந்தக்காரர்களின் குறைப்பாடுகள் மற்றும் நிருமாணிப்பு நடவடிக்கைகளின் மந்தகதி காரணமாக ரூபா.மில்லியன் 165.2 ஐ செலவிடப்பட்டதன் பின்னர் நிருமாணிப்பு நடவடிக்கைகளை இடைநிறுத்தப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்டாலும் 06 நிலையங்களில் மட்டும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 03 பயிற்சி நிலையங்களில் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |

## 3.3 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையால் 2018 ஆம் ஆண்டில் 1.100 ''துருணு சிரம சக்தி பிரஜா'' அபிவிருத்தி கருத்திட்ட-ங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2018 நவம்பர் 15 ஆந் திகதியில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்-டிருந்தது. 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் இந்த கருத்திட்டங்களின் பொருட்டு ரூபா. 206,477,640 ஐ செலவிடப்பட்டிருப்பினும், 2019 யூலை 31 ஆந் திகதியில் அந்தக் கருத்திட்டங்களில் 185 கருத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தியிருக்கவில்லை என்பதுடன், 471 கருத்திட்டங்களில் வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | இதன்போது முடிவுறுத்தப்படாத 471 கருத்திட்டங்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பினும், குறிப்பிட-ப்பட்ட கூட்டுத் தொகையில் 1100 கருத்திட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படாத 185 கருத்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டில் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு தாமதமாகி கிடைக்கப்பெற்றமை காரணமாக 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் 50 மில்லியன் தொகை மட்டும் விடுவிக்கப்பட்டுள்ளது. அதன் காணரமாக சில தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டங்களை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | சபையால் நடைமுறைப்படுத்துகின்ற விசேட கருத்திட்டங்களை முறையான வகையில் திட்டமிடப்-பட்டு சிறந்த கண்காணி-ப்பின் கீழ் நடைமுறை-ப்படுத்துவதன் மீது முகாமைத்துவம் கவனம் செலத்தல் வேண்டும். |
| (ஆ) சபையின் விசேட கருத்திட்டப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2019 யூன் 06 ஆந் திகதிய முன்னேற்ற அறிக்கை பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் ரூபா. 406,843,820 ஐ செலவிடப்பட்டு 3000 ம் ''துருணு சிரம சக்தி'' அபிவிருத்தி கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. அதில் 66 கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை என்பதுடன், வேலை முடிவுறுத்தப்படாத 206 கருத்திட்- | மக்களின் பங்களிப்பு இளைஞர் கழகங்களிடம் உரியவாறு கிடைக்கப்பெறாமை, பௌதீக மற்றும் நிதி வளங்கள் கிடைக்கப்பெறல் தாமதமடைதல், இயற்கை அனர்த்த நிலைமைகள் போன்ற விடயங்கள் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. அலுவலர்களின் வினைத்திறனின்மை அல்லது மோசடி நடவடிக்கைகள் காரணமாக செயற்படவில்லை என்று அறிக்கையிடப்படும் அலுவலர்கள் | விசேட கருத்திட்டங்கள் ஆரம்பிக்கும் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் திட்டங்களை தயாரித்து உரிய மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| டங்களில் 47 கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 75% அல்லது அதற்கு குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | தொடர்பில் ஒழுக-காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்காக உரிய பிரிவுகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

**3.4 நிதியங்களின் குறை பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய இளஞைர் சேவை சபையின் 2019 ஆண்டின் செயற்றிட்டம் படி துறைசார் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் பொருட்டு ரூபா.மில்லியன் 70.10 ஆன தொகை ஒதுக்கீடு செய்திருப்பினும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முன்னேற்ற அறிக்கை படி திட்டத்தில் இச் செயற்பாடுகளின் பொருட்டு ரூபா.மில்லியன் 26.60 அதாவது 38% செலவிடப்பட்டிருந்தது. | 2019 ஆண்டின் செயற்றிட்டம் படி ரூபா. மில்லியன் 70.10 தொகை வழங்கியிருப்பினும், பயிற்சி நிலையங்களின் நிருமாணிப்பு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாமை காரணமாக அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகளை செலவிடுவதற்கு முடியவில்லை. | பல்வேறு கருத்திட்டங்கள் மற்றம் நிகழ்ச்சிகளின் கீழ் சபையிடம் கிடைக்கப்பெறும் ஒதுக்கீடுகளை ஆகக்கூடிய வகையில் பயன்படுத்துவதற்கு முறையான நிகழ்ச்சி நடைமுறைப்படுதல் வேண்டும். |

**3.5 பயனற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| அ) சபரகமுவ மாகாண அலுவலகத்தால் படங்கல பயிற்சி நிலையத்திடம் சமையல் உபகரணங்களை கொள்வனவு செய்தல் பொருட்டு தலைமை அலுவலகத்தால் வழங்கியிருந்த ரூபா. 1,998,556 ஆன தொகை முறையான அனுமதியின்றி ரூபா. 998,771 ஐ செலவிடப்பட்டு பேகரி கற்கைநெறி உபகரணங்களை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையில் 2.8.5, 3.4.3, 3.4.4, 5.3.7 (அ) மற்றும் 6.9.1 (அ) பந்திகளுக்கு முரணாக விலை கணக்குகளை கோருதல் மற்றும் ஒப்பந்த அளிப்புகளுக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதே-போன்று இந்த பெறுகை பொருட்டு முறையான உடன்- | படங்கல பயிற்சி நிலையத்திடம் வழங்கியிருந்த சமையல் உபகரணங்களுக்கு ஏற்புடையதான பேகரி கற்கைநெறி அந்த நிலையத்தில் நடைமுறைப்ப-டுத்தாமை காரணமாக இந்த உபகரணங்களை மஹரகம இளைஞர் நிலையத்திடம் வழங்கப்பட்டது. அதன்படி தற்போது இந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்டுகின்றேன். | மாகாண அலுவலகங்கள் மூலம் மேற்கொள்கின்ற கொள்வனவுகளின் போது பொருட்களின் தேவை சரியாக அடையாளம் காணப்பட்டு வழிகாட்டல்களுக்கு அமைவாக மேற்கொள்வதன் மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| படிக்கை இருக்கவில்லை என்பதுடன், பொருட்களை பொறுப்பேற்கும் துண்டில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து 38 நாட்களுக்கு பின்னர் நிலையத்திடம் பொருட்களை கையளிக்கப்பட்டிருந்தது. மேலும் கணக்காய்வு செய்த திகதியில் 2019 ஒக்டோபர் 03 வரை கற்கை நெறிகளை ஆரம்பிக்கப்படாமை காரணமாக 09 மாத காலப் பகுதி பொருட்கள் பயனற்று இருந்தன. | | |
| (ஆ) 2017 ஏப்பிரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கையில் 04 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் நிறைவேற்றப்படுகின்ற வகையில், சபையின் பயிற்சி நிலையங்கள் மற்றும் 28 அலுவலகங்களில் நேரம் குறிக்கும் இயந்திரங்கள் பொருத்தியிருக்கவில்லை என்பதுடன், 2013 ஆம் ஆண்டில் ரூபா. 2,467,298 ஐ செலவிடப்பட்டு பயிற்சி நிலையங்களில் பொருத்தியிருந்த 56 இயந்திரங்களில் 53 இயந்திரங்கள் செயலற்று இருந்தமை காரணமாக சம்பந்தப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக காணப்பட்டது. | செயலற்ற நிலையில் உள்ள இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்கும், மென்பொருள்களை உள்ளடக்குவதற்கும், மென்பொருள் தொடர்பாக தற்போ-துள்ள தொழில்நுட்ப குறைப்பா-டுகளை சீராக்குவதற்கும், பொருத்தப்படாத இயந்திரங்களை பொருத்துவதற்கும் சம்பந்தப்பட்ட வழங்குநரிடத்தில் அறிவிக்கப்ப-ட்டுள்ளதுடன், மாகாண மட்ட-த்தில் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் கொள்முதலை நிறைவேற்றிக் கொள்வதற்குள்ள பணியின் பெறுமதிக்கு செயலாற்றுகை பிணையினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | உரிய சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு ஒழுங்கமைந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், பொருத்தியிருந்த இயந்திரங்கள் செயற்படாமை தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 3.6 கொள்முதல் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய இளைஞர் சேவை சபையின் சபரகமுவ மாகாண அலுவலகத்தால் மோட்டார் கைத்தொழில் கற்கைநெறிக்கு ஏற்புடையதாக ரூபா 922,870 பெறுமதியான பயிற்சி உபகரணங்களை கொள்வனவு செய்வறத்கு, 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் கட்டளைகளை மேற்கொண்டிருந்த போதிலும் பொருட்களை கையேற்கும் பற்றுச்சீட்டு பிரகாரம் கட்டளையிடப்பட்ட திகதிக்கு முன்னராக அதாவது 2018 திசெம்பர் 20 ஆந் திகதியில் களஞ்சியத்திடம் பொருட்கள் கிடைக்கப்பெற்றிருந்தன. | முகாமைத்துவத்தால் அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. | இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பாக விசாரணை செய்தல் வேண்டும். |

## 3.7 மனித வளங்கள் அபிவிருத்தி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் இளைஞர் அலுவல்கள் தொடர்பான நடவடிக்கைகளை கூட்டிணைக்கும் பொருட்டு 11 இளைஞர் சேவை அலுவலர்களை நியமனம் செய்திருக்கவில்லை. ஆயினும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு புறம்பாக மற்றும் கள அலுவலர்கள் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ரூபா.300 ஆன மாதாந்த கொடுப்பனவும் செலுத்தப்பட்டு பல்வேறு தரங்களுக்குரிய 173 இளைஞர் சேவை அலுவலர்களை பிரதான அலுவலகம், பயிற்சி நிலையங்கள் மற்றும் பிரதேச அலுவலகங்களில் பல்வேறு கடமைகளின் பொருட்டு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | 2020.10.26 ஆந் திகதியில் வெளியிடப்பட்டிருந்த முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் DMS/CIR/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகள் பிரகாரம் வெற்றிடங்களின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அமைச்சு செயலாளரது அனுமதி பெற்றுக்கொள்ளுதல் போதுமானதாகியதால் 2020.11.16 ஆந் திகதியில் இளைஞர் மற்றும் விளையாட்டு துறை அமைச்சின் செயலாளரிடம் நிலவும் வெற்றிடங்கள் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக அனுமதி பெற்றுக்கொள்வதற்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் உடனடியாக உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | இளைஞர் சேவை அலுவலர்களுக்கு ஏற்புடையதான கடமைகளில் குறித்த அலுவலர்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். அதேபோன்று இளைஞர் நடவடிக்கைகளை கூட்டிணைக்கும் அலுவலர்களது வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |
| (ஆ) விபரமான யெற்றிட்டம் பிரகாரம், தேசிய இளைஞர் சேவை சபையின் திறன் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், பயிற்சி நிலையங்களின் பொருட்டு 55 ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்துக் கொண்டு கல்விசார் பணியாற்தொகுதியினரை 80% வரை அதிகரிப்பறத்கு திட்டமிடப்பட்டிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 34 ஆலோசகர்களை ஒப்பந்த அடிப்படையின் மீது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. | தேசிய இளைஞர் சேவை சபையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதி பிரகாரம் 2019 ஆண்டுக்காக 65 ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டில் தொழில்சார் பயிற்சி பிரிவிடம் 34 ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் தேசிய இளைஞர் சேவை சபையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதியில் ஆலோசகர்களின் எண்ணிக்கை 82% வரை நிரப்பப்பட்டிருந்தது. | பயிற்சி தேவைகளை போதியளவிலும் தகைமைகளைக் கொண்டுள்ள கல்விசார் பணியாற்தொகுதியினரையும் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுத் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறைகள் மற்றும் நல்லாளுகை

### 4.1 நிலையான அபிவிருத்தியின் நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் அறிமுகப்படுத்தியுள்ள "நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030" பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனங்களாலும் பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், தேசிய இளைஞர் சேவை சபையால் தமது விடயவெல்லைக்குள் வருகின்ற நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | தற்போது உரிய அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2018.06.04 ஆந் திகதி அரச நிறுவனங்களால் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தயாராக இருத்தல் தொடர்பான, வினாக்கொத்தை பூர்த்தி செய்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய NP/SP/SDG/17 ஆம் இலக்க சுற்றுநிருபம் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |